# அரசியல் படுகொலைகள் குறித்து விசாரிப்பதற்கு

## சுதந்திர கமிஷன் தேவை

(லண்டன்)
"இலங்கை அரசு கடந்த காலங்களில் மேற்கொண்ட அரசியற்படுகொலைகள் குறித்து நியாயமான சுதந்திர

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 22 இதழ் 83
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 04 – 05 – 1992

## உடுகம்பொலவை கைது செய்வது சிரமம்

(கொழும்பு)
முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவை கைதுசெய்வது இன்னும் குற்ற புலனாய்வு பிரிவினருக்கு சிரமமாகவே உள்ளதாக தெரிக்கப்படு

(4-ம் பக்கம் பார்க்க)

## சுவிஸில் தமிழ் இளைஞர் மோதல்

(பேர்ண்)
சுவஸில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் இரு தமிழ் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் இடையில் கைகலப்பு இடம் பெற்றதாக அங்கிருந்து வரும்

(4-ம் பக்கம் பார்க்க

# சர்வதேச நிதி அமைப்புக்கள் தமிழர்பிரச்னையைத்தீர்க்குமாறு இலங்கை அரசுக்கு நெருக்குதல்!

## தாமதித்தால் நிதி உதவிகளைக் குறைப்பதாகவும் அச்சுறுத்தல்!!

(கொழும்பு)
வடக்கு - கிழக்குப் பிரச்னையை கூடியவிரைவில் பேச்சு வார்த்தை ஒன்றின் மூலம் தீர்குமாறு உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அரசுக்கு தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளது. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையுடன் கூடிய வழிமுறைகளை இலங்கை அரசு உடன் மேற்கொள்ளாவிடில் இலங்கைக்கான நிதி உதவிகளையும் கடன் தொகைகளையும் பெருமளவில் குறைக்கப்போவதாகவும் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் அச்சுறுத்தியுள்ளன.

இலங்கை அதன் உள்ளூர் உற்பத்தியில் 5.9 சதவீதத்தை பாதுகாப்பு செலவினங் களுக்காக செலவிட்டுவருகிறது இந்தந் தொகையானது உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கவனத்தைப் பெறுச் ஈர்த்திருப்பதாகத் தெவிக்கப்படுகிறது.

மேலும பாதுகாப்பு செல

(4-ம் பக்கம் பார்கக)

## இராணுவம் சுற்றிவளைப்பு தமிழர் வெட்டிக்கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு பெரியபுல்லுமலை, அறந்தலாவை 19ம் கட்டை உன்னிசை ஆகிய முகாம்களிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை வெளியேறிய ராணுவத்தினர் புல்லுமலை

(4.ம் பக்கம் பார்க்க)

## வடக்கு — கிழக்கு பிரிவதில் ஐ.தே.க.வும் சுதந்திரகட்சியும் உறுதியாக உள்ளன?

(லண்டன்)
இலங்கையின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கூட்டிய குழுக் கூட்டங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டுமென உறுதியாக இருப்பதாக கூறப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தமிழர் முஸ்லிம்களால் துன்புறுத்தல்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு, திருகோணமலை அகதி முகாம்களிலுள்ள தமிழர்களை முஸ்லிம்களும், ஊர்காவல்படையினரும் துன்புறுத்தி வருவதாக அறியப்படுகின்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வீடுகள் தீக்கிரை

(மன்னார்]
கடந்த வியாழக்கிழமை கறுக்காய்குளம் என்ற இடத்தை சுற்றிவளைத்த ராணுவ அணி ஒன்று கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் நடத்தியதில் செல்வன் சிறிதரன் (30 வயது) பழனியாண்டி (70 வயது) ஆகியோர் பலியாகியுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஊரடங்கு நீக்கம்

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்கு சட்டம் நேற்று ஞாயிறு நண்பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று அறிவித்தது. (க)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸாரின் பெற்றோரையும் யாழ். அழைத்து வர ஏற்பாடு

[கொழும்பு]
எபது இரண்டாவது யாழ்ப்பாண விஜயம் இம்மாதத்தில் இடம்பெறும். அப்போது புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸாரின் பெற்றோர்களையும், கூடுதலான பௌத்த பிக்குகளையும் அங்கு அழைத்துச் செல இருக்கிறோம்.

இவ்வாறு ராஜகிரிய ஒபேசேகபுரவிலுள்ள கிரி அமர விகாரையில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டில் பாலத்துறை மாபகம அஸ்ஸாஜி தேரோவும் பலப்பிட்டி சித்தானந்த தேரோவும் தெரிவித்தர்கள்.

மேலும் அவர்கள் கூறிய

[4ம் பக்கம் பார்க்க]

## தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

[யாழ்ப்பாணம்)
தமிழீழ மீட்பு நிதிக்கு கடனளித்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேரின் கடன் மீளளிப்பு இம்மாதம் 16ம், 17ம் திகதிகளில் நடைபெறும்என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி அறிவித்துள்ளார்.

## 1983-ம் ஆண்டிலிருந்து 36கடதாசிஆலைஊழியர்.பலி

(மட்டக்களப்பு)
வாழைச்சேனை கடதாசி ஆலையில் கடமை புரிந்த 36 ஊழியர்கள் 1983ம ஆண்டிலிருந்து பலியாகியுள்ளார்கள். இவர்களுக்கு உதவித் தொகையோ, நிவாரணங்களோ இதுவரை வழங்கப்படவில்லையென கும்பாறை தமிழர் மகா சங்கம் வாழைச்சேனை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தலைவருக்குத் தெரிவித்துள்ளது.

மேலும் அவாகள் தெரிவித்திருப்பதாவது; வன்செயல் சம்பவங்களால இறந்த ஊழியர்களுக்கு வழங்கப்படடும் கொடுப்பனவுகள் ஓய்வுகாலம் வரை வழங்கும் சம்பளம், சேதங்களுக்கான நஷ்டஈடு, கடன் என வழங்கலாம் என பொதுநிர்வாக சுற்றறிக்கை வழிகோலியுள்ள போதிலும் காகித ஆலை ஊழியர்களுக்கு இதுவரை எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சு)

## சுதந்திரக் கட்சியின் உட்பூசல் தெருவுக்கு வந்தது

(கொழும்பு)
அனுரா பண்டாரநாயக்காவிற்கும், சந்திரிகா விஜயகுமாணரதுங்காவுக்குமிடையிலான தலைமைப்போட்டிவலுவடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இவர்களுக்கிடையிலான தலைமைப்போட்டி தெருவுக்கு வந்துவிட்டதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கிரிலபனையிலிருந்து ஆரம்பித்தகூட்டு எதிர்க்கட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### ENGLISH TUTION

For Individual and House visits by retired Govern--ment Servant. Contact 402, Manipay Road, Otumadam Jaffna. on Sundays between 8-00 a. m. and 10-00 a. m. (C 6217)

### ஜோதிட, பாடசாலை நூல்கள்

நூலாசிரியர் சத்தியதாசனின் செவ்வாய் மாற்றம் பாடசாலை புத்தகங்கள், அப்பியாச கொப்பிகள், உபகரணங்கள் யாவற்றுக்கும் நீங்கள் நாட வேண்டிய புத்தகசாலை தினேஸ் புத்தகசாலை, 19, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (சி-6247)

### பரிசு நூல்

பரிசளிப்பதற்கேற்ற சாகித்திய மண்டல பரிசுபெற்ற நூல். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30/ மாணவர்களும் நடிப்பதற்கேற்ற 10 நாடகங்கள். ஒரு கட்டுரை. [சி-6241]

### சே பிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவும், மாணவர்களுக்கு விசேட சலுகையும் வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை இல. 363, காங்கேசன் துறை வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

### வைத்திய சேவை

பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்கும் முறிவு, நெரிவு, சதைநெரிவு, கண்டல் முதலிய சகலவித ரோகங்கட்கும் நிவாரணம் பெற நாடுங்கள். அமுதா வைத்திய நிலையம். டாக்டர் திருமதி அ. ஸ்ரீபதி D. A. M [Cey] [சமாதான நீதவான்], 15, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, [குயின்பத்மாவீதி], யாழ்ப்பாணம். [சி-6189]

## கற்பூர புல் எண்ணெய்

[யாழ்ப்பாணம்]

கற்பூரப் புல்லில் இருந்து எண்ணெய் வடிக்கும் பரீட்சார்த்த முயற்சியினை முல்லைத்தீவுப் பிரதேச கிராமிய உற்பத்திக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன. வடித்துப் பெறப்பட்ட புல் எண்ணெய் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால் பரிசோதனை செய்யப்பட்டுவருகிறது.

# விவசாய அடிப்படையிலான சிறுதொழில் அபிவிருத்தி

[கொழும்புத்துறை]

அகில உலக பெயர் ஸ்தாபனம் யாழ் கிளை, யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைந்து விவசாய அடிப்படையிலான சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி வேலைப்பட்டறையை அண்மையில் நடாத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவிலிலுள்ள யாழ். திறந்த பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற இவ் ஒரு நாள் வேலைப்பட்டறையில் செயர், யு எஸ். எய்ட் விவசாயத் திட்ட நிறைவேற்று நிறுவனங்கள [யாழ்ப்பாணம், கிளிநொச்சி] மாவட்ட கூட்டுறவுச்சபை ஊற்று, அறவழிப் போராட்டக்குழு, தென்னிந்திய திருச்சபை, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவு, செஞ்சிலுவைச் சங்கம், உலர்வலய அபிவிருத்தி மன்றம் ஆகியன பங்குபற்றின.


திறந்த பல்கலைக்கழகப் பிரதிப் பணிப்பாளர் திரு. என். தில்லைநாதன், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்டவிரிவுரையாளர் திரு ஆர். நந்தகுமார், செயர் பிரதி பிராந்தியப் பணிப்பாளர் திரு. ம பத்திநாதன் ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினர். — 154

## மாதாந்த உதவிப் பணம

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜனவரி. பெப்ரவரி மாதங்களுக்கான பொதுசன உதவிப் பணம் கிராமசேவை அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. (74)

# 31-ம் நாள் நினைவு தினம்



## G B. வின்சன்ற்

தோற்றம்: 08-07-1911 மறைவு: 05-04-1992

''சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்''

இவரது ஆன்மசாந்திக்காக நாளை 05-05-92 செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு யாழ். அடைக்கலநாயகி தேவாலயத்தில் நிறைவேற்றப்படும் இரங்கற்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

67, ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம். [சி 6248]

# இராசி பலன்

04/05/1992
திங்கட்கிழமை
(தமிழுக்கு சித்திரை 22)

பிரதமை மு. இ. 11-07வரை கார்த்திகை பி. ப. 1-36வரை இராகுகாலம் காலை-7-26முதல் 8-56 வரை. சுபநேரம் பகல் 11-56 முதல் 1-26 வரை.

மேஷம்: குடும்பத்தில் சிறு பிரச்சனை, புத்திரர் யோசனை, முன்கோபம்.

இடபம்: வெளியூர் பயணம். தெய்வீக வழிபாடு. புகழ்.

மிதுனம்: சோர்வு. காரியதடை, வைத்திய செலவு.

கடகம்: எதிர்பார்த்தவை வெற்றி, போட்டி குறைதல், பணவரவு.

சிங்கம்: புதிய முயற்சி, அதிக சிந்தனை, சிறுவிரயம்.

கன்னி: நண்பர்கள் பகை. அதிருப்தி, உடல் உபாதை.

துலாம்; வாக்குவாதம், துக்கநிகழ்வு, காலதாமதம்.

விருச்சிகம்: எதிர்பாராத நன்மை, செல்வந்தர் ஆதரவு. மனக்களிப்பு.

தனுசு: வீட்டுயோசனை, காரிய அனுகூலம், சந்திப்பு.

மகரம்; காரியத்தடை, பணக்குறைவு. அலைச்சல்.

கும்பம்: மனப்பயம், குடும்பபகை, அவமதிப்பு.

மீனம்: வட்டில் சுறுசுறுப்பு வேலைப்பளு, பெரியார் ஆசி.

ஜோஸ்யர்

## நடமாடும் நூலகசேவை

(யாழ்ப்பாணம்)

''யாழ். போதனை வைத்தியசாலையின் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் உடலியல், உளவியல் நலன் கருதி நடமாடும் நூலகசேவை நோயாளர் நலன் டரிசங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நூலக சேவைக்குத் தேவைப்படும் [illegible], கவிதைகள். நாவல்கள், வெளியீடுகள் சஞ்சிகைகள், போன்றவற்றை சங்கத்துக்கு அன்பளிப்புச் செய்து உதவுமாறு சங்க நிர்வாகி கோரியுள்ளார்.

மலேரியா

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

மலேரியா நோய்க்கு பயன்படுத்தப்படும் முக்கிய மருந்துகளுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குளோரோகுயின், பிறிமாகுயின் எனப்படும் மேற்படி இருமலேரியாக் குளிகை வகைகளை போதுமான அளவு யாழ். மாவட்ட மருந்துக்களஞ்சியத்திற்கு அனுப்பிவைக்கவில்லை என்று இதுபற்றி தெரியவருகின்றது. (72)

# 31ம்நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

எம் அன்புச் செல்வமே!
சுதாகரனே!



## பொன்னுச்சாமி சுதாகரன்

மலர்வு: 27-02-1972 உதிர்வு: 04-04-1992

பால்மனம் மாறாத பாலகனே
எம் குடும்பத்தின் இளையவரே
திடீர் மாரடைப்பால்
காலன் உன்னை வென்று விட்டான்
அல்லல்படும் நேரத்தில் - நீ
யாரைத்தான் அழைத்தாயோ
உன் அருகில் நின்ற அக்காவிற்கும்
காலன் அழைப்பை கூறாது போனாயோ
அப்பா, அம்மா, உடன்பிறந்தவரை
மறந்தும் தான் போய்விட்டாய்
காலமெல்லாம் உம்பிரிவை
கலங்க வைத்துப் போய்விட்டாய்
எங்கையா போய் விட்டாய்
எம்மை விட்டும் போய்விட்டாய்

உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, அக்காமார், அண்ணுமார்,
மைத்துனர்மார், மைத்துனிமார், அம்மம்மா,
மருமகர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

கைதடி நாவற்குழி,
கைதடி. (சி-6251)

# AIKAYES - அறிவித்தல்

## கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கான வடபகுதி தனியார் உணவு விநியோகம்

எமது 20-03-92 திகதியிட்ட பத்திரிகை அறிவித்தல் பிரகாரம் கீழ்வரும் பகுதிகளில் விநியோகம் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவுசெய்து வெற்றுக் கலன்கள், வெற்று உறைகள், அடையாள அட்டை அல்லது அத்தாட்சி சான்றிதழ் ஆகியவற்றுடன் விநியோகத்திற்கான பதிவு விண்ணப்பத்தையும் கொண்டுவரவும்.

அனுப்பி வைக்கப்பட்ட மண்ணெண்ணை எமக்குக் கிடைக்காததால் பிறிதொருதிகதியில் விளம்பரப்படுத்தி விநியோகிக்கப்படும். யாழ். பகுதி மக்களை விரைவில் சந்திப்போம்.

| உ. அ. அதிபர் பிரிவு: | இடம்: | திகதி: | நேரம்: |
|---|---|---|---|
| சாவகச்சேரி பளை | ''திருக்கணிதம்'' ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி. | 06-05-1992 | 08-00—06-00 |
| | | 07-05-1992 | 08-00—06-00 |
| நல்லூர் | ''பழைமடம்'' நல்லூர் ஆலய மேற்கு வீதி, நல்லூர். | 10-05-1992 | 08-00—06-00 |
| | | 11-05-1992 | 08-00—06-00 |

## AIKAYES JAFFNA

முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.
(நாகம்ஸ் சினிமா முன்பாக) (சி-6249)

மாநகர சபை நூலகம்? யாழ்ப்பாணம்

# "யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுங்கள்"

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை பிரகடனப் படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதன்பின்னர் பிரச்னைக்கான கௌரவத்துடன் கூடிய நிரந்தரமான தீர்வொன்றை காண்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தலாம்''

யாழ்ப்பாணம் வந்திருந்த பௌத்த நல்லெண்ண குழுவினருக்கு யாழ்ப்பாணம் இந்து சமய பேரவையினர் சமர்ப்பித்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

நீங்கள் ஓர் சமாதானத் தூதுக்குழுவாக இங்கு வருகை தந்திருப்பதையிட்டு நாங்கள் மிகுந்தமகிழ்ச்சி அடைகின்றோம். பல நூற்றாண்டுகளாக சமாதானத்துடனும் புரிந்துணர்வுடனும் சகோதரர் போல் இந்நாட்டில் வாழ்ந்து வரும் இருபெரும் இனங்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் பிணக்கை சமாதானமாகத் தீர்ப்பதற்கு நீங்கள் எல்லோரும் முயல்வீர்கள் என நாங்கள் நம்புகின்றோம்.

முதலாவதாகவும் முக்கியமாகவும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை பிரகடனப் படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம். அதன் பின்னர் பிரச்சினைக்கான கௌரவத்துடன் கூடிய நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதற்கு பேச்சு வார்த்தைகள் நடாத்தலாம். இந்த யுத்தத்தினால் வடக்கிலும் கிழக்கிலும் மற்றெல்லோரையும் விட இந்துக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாவதாக தற்போதைய யுத்தத்தினால் பல புனிதமான இந்து வணக்கத் தலங்கள் சீர்குலைக்கப்பட்டு அல்லது எதுவித பூசைகளும் இல்லாமல் பல வருடங்களாக மாதங்களாக இருக்கின்றன. எங்களுடைய வழக்கத்தின் படி கோவில்கள் சீர்குலைக்கப் படுவது அல்லது கோவில்களில் பூசைகள் நடைபெறுதிருப்பது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதல்ல. இது தொடர்பாக எமது நாட்டின் பண்டைய இந்துக் கோவில்களில் சிலவான மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரத்திலும் கீரிமலையிலுள்ள நகுலேஸ்வரத்திலும் மாவிட்டபுரத்திலுள்ள கந்தசாமி கோவிலிலும் கணிசமானளவு காலம் பூசைகள் நடைபெறவில்லை. என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். எங்களுடைய பூசகர்களையும் அவர்களது உதவியாளர்களை யாவது நித்திய பூசைகளைச் செய்ய இவ்வாலயங்களுக்குள் அனுமதிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். கோவில்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். (திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்கள்)

கோவில்களில் நித்திய பூசைகள் செய்வதற்கும் வெளியே இந்துக் கிரியைகள் செய்வதற்கும் தேவையான பூசைத் திரவியங்களுக்கு பெருத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. உதாரணமாக கற்பூரம் ஒரு விலைகூடிய பொருளாகும். சிறிய பைக்கற் ஒன்று ரூபா 30/ முதல் ரூபா 40/- வரை யாழ்ப்பாணத்தில் விலை போகின்றது. அவ்வாறே வாசனைத் திரவியங்களின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் இந்துக்கள் தமது நாளாந்த இறைவணக்கத்தை செய்ய முடியாதுள்ளனர். எனவே இப்பூசைத்திரவியங்கள் நியாய விலையில் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சில பிரதேசங்களில் அரச குடியேற்றங்கள் நடைபெறுவதையிட்டு நாம் கவலை அடைந்துள்ளோம். இதனால் தாம் சிறுபான்மையினர் ஆகிவிடுவோமோ என்று எம் மக்கள் அஞ்சுகின்றனர். முன்னர் குறிப்பிட்டவாறு தற்போதைய நெருக்கடியால் மற்றெல்லோரையும் விட இந்துக்களே பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். ஆகையால் இவ்விடயங்களை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து பௌத்த சகோதரர்களை மிக்கமதிக்கின்ற இலங்கை இந்துக்களின் மனக் குறைகளைத் தீர்ப்பதற்கு நட நடவடிக்கை எடுக்கும்படி மதிப்புக்குரிய பௌத்த குருமார்களை கேட்டுக் கொள்கின்றோம்.

---

**விடுதலைப் புலிகள்**
**கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்**
# தமிழிசை விழா

**இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதி.**

**மூன்றும் நாள்**
**04-05-1992 திங்கட்கிழமை**
## நிகழ்ச்சிகள்

**மாலை 5-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை**
**மங்கள இசை**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. என். ஆர். சந்தானகிருஷ்ணன் | திரு. எஸ். ஜெயராமன் |
| திரு. வி. சுப்பிரமணியம் | திரு. ஜி. சின்னநாதன் |
| திரு. கே. கிருஷ்ணதாசன் | திரு. ஆர். ஜீவா |
| திரு. எஸ். தேவதாசன் | திரு. என். வரதன் |

**6-00 மணி தொடக்கம் 6-45 மணி வரை பாட்டு**

செல்வி மேகலா கனகசபை பாட்டு
செல்வி பாக்கியலட்சுமி நடராசா வயலின்
திரு. கே. துரைராசா மிருதங்கம்

**6-45 மணி தொடக்கம் 7-45 மணி வரை பாட்டு**

செல்வி கனகாம்பரி பத்மநாதன் பாட்டு
திரு. எஸ். கோபிதாஸ் வயலின்
திரு. கே. கண்ணதாசன் மிருதங்கம்

**7-45 மணி தொடக்கம் 8-45 மணி வரை பாட்டு**

திரு. எஸ். குமாரசாமி பாட்டு
திரு. எஸ். வெங்கடேஸ்வரசர்மா வயலின்
திரு. எஸ். பாலச்சந்திரசர்மா மிருதங்கம்

**8-45 மணி தொடக்கம் 9-15 மணி வரை**
**சிறப்பு விருந்தினர் உரை**

1. திரு. இளம்பரிதி (யாழ். மாவட்ட அரசியல் நிர் நிர்வாகப் பொறுப்பாளர்)
2. வண. பிதா பிரான்சிஸ் யோசேப் அடிகளார்
3. திரு. ரவி (திருமலை தொடர்பகம்)

**9-15 மணி தொடக்கம் 10-15 மணி வரை பாட்டு**

திரு. எஸ். திலகநாயகம் போல் பாட்டு
திரு. ஆர். ராதாகிருஷ்ணன் வயலின்
திரு. எஸ். மகேந்திரன் மிருதங்கம்
திரு. கே. துரைராசா கெஞ்சிரா.

**10-15 மணி தொடக்கம் 11-30 மணி வரை**
**நாதஸ்வரம்**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. கே, ஆர். சுந்தரமூர்த்தி | திரு. கே. நித்தியான |
| திரு. வி. கே. கானமூர்த்தி | திரு. பி. கணே |
| திரு. வி. கே பஞ்சமூர்த்தி | திரு. ஆர். பா |
| திரு. கே. செல்வரட்ணம் | திரு. என். க |

---

# 40கோடி 60 லட்ச ரூபாவை இலங்கைவங்கி

## அறவிடமுடியாத கடனுகக் கருதி பதிவழித்துள்ளது

(கொழும்பு)

இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு கடனாகக் கொடுத்த 40 கோடி 60 லட்சம் ரூபாவை அறவிட முடியாக் கடனாகக் கருதி பதிவழித்துள்ளது.

பதிவழித்துள்ள கடனாளிகளில் சிலர் எடுத்த கடனில் ஒரு தவணைப் பணம்கூடச் செலுத்தவில்லை. இதில் எட்டுக் கடனாளிகள் மாத்திரம் 8 கோடி 55 லட்சம் ரூபா கொடுக்குமதியாளர்களாகவுள்ளார்கள்.

28 கோடி 83 லட்சம்ரூபா 44 பேருக்கு எந்தவிதப் பொறுப்புமில்லாமல் வழங்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சொத்துகள் விற்று அறவிடக்கூடிய 22 கோடி 66 லட்சம் ரூபாவை மீளப்பெறுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரியவருகிறது. (சு)

---

## குண்டுவெடிப்பில் ஐவர் பலி

(சண்டிகார்)

பஞ்சாப்பில் நேற்று முன்தினம இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஐவர் கொல்லப் பட்டதுடன் 15 பேர் காயமடைந்தனர்.

சன நெரிசல் மிகுந்த பகுதியொன்றில் இக்குண்டுவெடிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது. (ரி)

---

★ லாஸ்ஏஞ்சல்ஸில்

## மாலை முதல் காலை வரை தொடர் ஊரடங்கு அமுல்

(லாஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மாலை முதல காலைவரையிலான ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுல் செய்யப்பட்டுவருகிறது.

தேசிய காவல்படையினரும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் இந்நகரின் தெருக்களில் ரோந்துப்பணியில் தற்போது ஈடுபட்டுவருகிறார்கள்.

மேலும் ஆயிரத்திற்கும்மேற்பட்ட படையினர் இப்பகுதிக்குச் செல்வதற்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

---

## கடவுச்சீட்டு விஸ்தரிப்பு நடவடிக்கை நிறுத்தம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு கடவுச்சீட்டு சர்வதேச நாடுகளுக்கு விஸ்தரிப்பது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச்சீட்டை சகல நாடுகளுக்கும் செல்வதற்கு விஸ்தரித்து அத்தாட்சிப் படுத்தும் நடவடிக்கையை திணைக்களம் நிறுத்தியுள்ளது.

இக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி சர்வதேச போதை வஸ்து கடத்தல், போலி ஆவணங்கள், பிரயாண காசோலைகளுடன் பயணம்செய்தல் உட்பட குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்படுவதாக சர்வதேச பொலிஸார் இரகசியப் பொலிஸ் திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளவதாக கூறப்படுகிறது. (ரி)

---

## இலங்கையின் சனத்தொகை

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகை கடந்தாண்டு 1 கோடி 72 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில்மேற்கொள்ளப் பட்ட புள்ளிவிபர மதிப்பீடுகளின் அடிப்படையிலே மேற் குறிப்பிட்ட தகவல் வெளியிடப்பட்டது. (ரி)

---

# சூசி அம்மையாரை கணவன்,பிள்ளைகள்சந்திப்பு

(ரங்கூன்)

பர்மிய எதிர்க்கட்சி தலைவியும் தற்போது தடுப்புக் காவலில் உள்ளவருமான ஒங்சாங் சூசி அம்மையாரை நேற்று முன்தினம் அவரது கணவரும் இருபிள்ளைகளும் சந்தித்தனர்.

சூசி அம்மையாரின் கணவா மைக்கேல் அரிஸ், இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார்.

பர்மிய அரசு தம் மனைவியை பார்வையிட அனுமதி வழங்கியதையடுத்து இங்கிலாந்திலிருந்து அவரும் அவரது இரு புதல்வர்களும் நேற்று முன்தினம் ரங்கூன் வந்து மனைவியை சந்தித்தனர். (கே)

---

## அனுமதியின்றி இறைச்சி விற்பனை

[பண்டத்தரிப்பு]

சில்லாலையில் லைசென்ஸ் அனுமதிப்பத்திரம் இன்றி மாட்டிறைச்சி விற்பனைசெய்த நபர் ஒருவர் சங்கானை காவல் துறையினரிடம் சிக்கிக்கொண்டார்.

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகம் இது பற்றி முறைப்பாடுசெய்ததையடுத்து கடந்த ஞாயிற்றுக் கிழமையன்றுசங்கானை காவல் துறையினரால் இவர் விசாரணைக் குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. — 72

---

யாழ். மாவட்ட சி. க. கூ. ச.

## பத்தாவது ஆண்டு ?

## போட்டி விபரங்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கனகடன்வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின்சமாசம்10வது ஆண்டு நிறைவையொட்டி பேச்சு, கட்டுரை உட்பட பல போட்டிகளை நடத்தவுள்ளது.

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாஜத்தினல் 10வது ஆண்டு நிறைவைமுன்னிட்டு நடாத்தப்படும் போட்டி விபரங்கள் வருமாறு:

இம்மாதம் 09-ம் திகதி- மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி (கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு) பி. ப 9-30, மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி (கீழ்ப்பிரிவ மேற பிரிவு) மு. ப. 10-30.

10ம் திகதி மு. ப. 9-
16ம் திக
னம்- பி.
மு. ப. 9
17ம் தி
மு. ப.
இழைத்

---

கல

வ
சன
பெ
குட
கல
ப
ர

# "அண்டை நாடுகள் எமக்கு பிரச்னையை ஏற்படுத்துகின்றன! சரத்பவார்

(புதுடில்லி)

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் விடயத்தில் பாகிஸ்தானுடன் போட்டியிட இந்தியா விரும்பவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் சரத்பவர் தெரிவித்தார்.

மகாராஷ்ரா மாநிலத்தில் இந்தியவிமானப் படையினரிடம் 100 க்கும் அதிகமான மிக் விமானங்களை கையளித்த பின்னர் பத்திரிகையாளர்களிடம் பாதுகாப்பு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உலகில் பல மாற்றங்கள் இடம் பெற்று வருகின்ற போதும் பாதுகாப்பு உஷார் நிலையை சோர்வடைவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அண்டைய நாடுகள் எமக்கு பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகின்றன. நாம் மிக விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

அமெரிக்காவுடன் இணைந்தும் நடத்தும் கடற்படை ஒத்திகையை கைவிடும் நோக்கம் இல்லை என்றும் மேலும் தெரிவித்தார். (மா)

## கப்பல் தீப்பற்றியது!

(லண்டன்)

28 ஆயிரம் தொன் எண்ணெய்க் கப்பலொன்று அத்திலாந்திக் பெருங்கடல் மத்தியில் மோதித் தீப்பிடித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோர்ஜியா கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான இக்கப்பல் தீப்பிடித்துக்கொண்டுள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளபோதும் சேதவிபரங்கள் பற்றிய தகவல்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. (கே)

## 42 லட்சம் மாணவர்களுக்கு இலவச சீருடைகள்

(கொழும்பு)

அடுத்தாண்டுமுதல் நாட்டிலுள்ள 42 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை கல்வி, உயர்கல்வி அமைச்சு மேற்கொண்டுவருகிறது.

11ம் ஆண்டு தொடக்கம் 13ம் ஆண்டுவரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வெள்ளைக் காற்சட்டைத் துணிகள் வழங்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு தரமான சீருடைகள் வழங்கப்படவேண்டுமென ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா மேற்படி அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ரி,

## 65 பத்திரிகையாளர் கடந்த வருடம் கொலை

(நியூயோர்க்)

கடந்த ஆண்டில் 65 க்கும் அதிகமான பத்திரிகையாளர் கடமையில் ஈடுபட்டிருந்தபோது அல்லது தமது கருத்தினை தெரிவித்தற்காக கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு நேற்று நடைபெற்ற சர்வதேச பத்திரிகை சுதந்திரத் தினத்தையொட்டி வெளியான அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பத்திரிகை சுதந்திரம் இன்றி வேறு எந்த சுதந்திரத்தையும் பெறமுடியாது என்பதே சர்வதேச பத்திரிகை சுதந்திரதினத்தின் தொனிப்பொருளாகும். மக்கள் தம்மைச் சுற்றியுள்ள நாடுகளில் நடைபெறுகின்றதை அறிந்து கொள்ளும் உரிமையே பத்திரிகை சுதந்திரமாகும்.

கடந்த பத்து ஆண்டுகளில் அதிகமான பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டமை இதுவே முதற்தடவையாகும். அத்துடன் பத்திரிகையாளர்களுக்கும் வெகுஜன தொடர்பு ஸ்தாபனங்களுக்கும் எதிராக 1200 க்கு அதிகமான தாக்குதலகள் நடத்தப்பட்டுள்ளன. [மா]

### சுதந்திரக்கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் மேதின ஊர்வலத்தில் இரு ஒலிபரப்பு வாகனங்களில் ஒன்றில் சுதந்திரக்கட்சியின் எதிர்காலத்தலைவர் அனுரா வென்றும், மற்றதில் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்காவென்றும் போட்டியாக ஒலிபெருக்கிக்கொண்டிருந்தார்கள்

இதனால் அதிர்ச்சியடைந்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் வாய்மூடி மௌனிகளாக ஊர்வலத்தில் சென்றார்கள். (ரி)

# "தமிழிசை விழாவை கிழக்கில் நடத்துவதற்கு சூழ்நிலையை ஏற்படுத்துவோம்"

(யாழ்ப்பாணம்)

"தமிழிசை விழாவை கிழக்கு மாகாணத்தில் நடாத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவோம். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு முக்கியம்"

இவ்வாறு நல்லூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'தமிழிசை விழா' இரண்டாவது நாள் நிகழ்ச்சியின்போது மட்டுநகர், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; தென்தமிழீழத்தில் இருந்து கலைஞர்கள் பங்கு பற்றுதலையிட்டு கலை யடைகிறோம். அங்கு மும்முனைத் தாக்குதல் நடைபெறுகிறது.

ஒருபுறம் முஸ்லிம்களின் அடாவடித்தனமும், இராணுவத்தினரின் கெடுபிடியும், சிங்கள ஆக்கிரமிப்பும் நிகழ்கிறது.

தமிழிசை விழா சிறப்பாக நடைபெறுகிறது. கலைஞர்களை விடுதலைப்புலிகள் மதிக்கின்றார்கள். மண்ணைக் கட்டிக்காக்க ஆயுதம் ஏந்திப் போராடுவதோடு கலைஞர்களையும் பண்பாடுகளையும் விடுதலைப் புலிகள் சட்டிக்காக்கின்றார்கள் என்றார்.

சிறப்புரையில் முன்னாள் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே, சிவஞானம், யாழ். மாவட்டத் தளபதி செல்வராசா ஆகியோரும பேசினர். (சு)

### அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய சுதந்திரவிசாரணைக் குழுவொன்று இதன் பொருட்டு நியமிக்கப்படவேண்டும்.

இவ்வாறு முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்குழு முன் சாட்சியமளிப்பதற்கு தற்பொது சேவையில் இருக்கும் பொலஸ், பாதுகாப்பு அதிகாரிகள் மட்டுமல்லாதுசேவையிலிருந்து ஓய்வுபெற்ற பாதுகாப்பு அதிகாரிகளும் அழைக்கப்படவேண்டும்.

இந்த அரசியற் படுகொலை குறித்து விசாரிப்பதற்கு பொலிஸ் பாதுகாப்பு பிரிவினர்க்கு அனுமதியளிக்கப்படும் பட்சத்தில் அதன் மூலம் நீதியான ஒரு விசாரணை நடைபெற மாட்டாது என்ற காரணத்தினாலேயே சுதந்திர விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்று உடுகம்பொல வலியுறுத்தியுள்ளார்.

### இராணுவம்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொலனியை சுற்றி வளைத்து தமிழர் ஒருவரை வெட்டி கொலைசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 10 தமிழரை முகாமுக்கு கொண்டு சென்றுள்ளார்.

35 ஆம் கிராமத்தைச் சேர்ந்த சரவணர் என்பவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவர்.

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே நாடாளுமன்ற தெரிவு குழுவுக்கு இருதரப்பினரிடமிருந்தும் சாதகமான ஒரு தீர்வுத்திட்டம் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாதிருப்பதாக பி. பி. ஸி. கொழும்பு முகவர் தெரித்துள்ளார். (கே)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் திருமதி

கணேசலிங்கம் தெய்வநாயகி

தாயின் மடியில்: 24-02-1939 இறைவன் அடியில்: 04-04-1992

திதி: 04-05-1992

பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்அமைந்து எம்மையெல்லாம் நேர்வழியில் நடாத்திய அன்புத் தெய்வமே உங்களை என்றும் மறவோம் அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய தெல்லிப்பழை துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று நடைபெறும் அன்னாரின் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாரையும்வேண்டுகிறோம்.

இங்ஙனம்

கணவன், மக்கள். மருமக்கள்,
சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிகள்,

"சரவண பவனம்"
இணுவில் மேற்கு, சுன்னுகம். (சி-6250)

# போதைப் பொருள் மோசடியில் 10 ஆயிரம் இலங்கையர் ஈடுபாடு

(கொழும்பு)

சட்டவிரோதமாக போதைப் பொருள் பாவனை, கடத்தல், சம்பவங்களில் ஈடுபட்ட 10 ஆயிரத்துக்கு அதிகமான இலங்கையர் தண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பதிவுசெய்யப்படாத ஆயுர்வேத வைத்தியர்கள், கஞ்சா அபின் போன்ற போதைப் பொருள்களை கலந்து மருந்து தயாரிப்பதனால் போதைப் பொருள் பாவனையாளர் இவ்வகையான மருந்துகளை உட்கொள்கிறார்கள் எனபோதைப் பொருள் தடுப்பு பணியக தலைவர் திரு. ஜெகநாதன் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமாகவறண்ட வலயப் பிரதேசங்களில்கஞ்சா பயிரிடப்பட்டு நகரங்களுக்கு கடத்தப்படுவதாகவும் அவர் கூறினர்.

தென்னந்தும்புடன் சேர்த்து கஞ்சாவை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யும் மோசடி அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்விதம் ஏற்றுமதியான கஞ்சா பிடிபட்டுள்ளது. என்றுஅவர் மேலும் கூறினர்.

### சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினங்களைப் பொறுத்தவரையில் ஆசிய பிராந்தியத்தில் குறிப்பிட்ட 22 நாடுகளில் இலங்கைஐந்தாவது இடத்தை வகித்து வருகிறது. வடகொரியா பாகிஸ்தான், பர்மா, புரூனே ஆகிய நான்கு நாடுகளுக்கு அடுத்ததாக பாதுகாப்பு செலவுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தை வகிப்பதாகவும் லண்டனில் வெளியிடப்பட்ட தகவல்களை சுட்டிக்காட்டி உலகவங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அரசுக்கு நிலைமையை எடுத்து விளக்கயிருப்பதாகவும் அறியவந்துள்ளது.

### தடுத்து

(1-ம பக்கத் தொடர்ச்சி)

தாவது: அரசாங்கத்துடன் கலந்துபேசி அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப்பெற்றஉறுதியான யோசனைகளை கொண்டு வாருங்கள் அதனை பரிசீலனை செய்வோம் என்று விடுதலைப்புலிகள் எம்மிடம் தெரிவித்தார்கள். [சு]

### வீடுகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

7 வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார், ராணுவ கட்டுப்பாட்டில அகப்பட்ட தமிழ் மக்கள இவ்வாறுக துன்புறுத்தப்படுவதோடு மருத்துவ வசதியின்றி அல்லலூறுவதாகவும் தெரியவருகிறது.

### கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களிலுள்ளோர் பலர் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அகதி முகாம்களிலுள்ள தமிழ் பெண்கள்பலர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பின்னர் கொலைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகாம்களிலிருந்து 20க்கு மேற்பட்ட தமிழ்மக்கள்கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### சுவிஸில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவிக்கின்றன.

மேதினஊர்வலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இடைவழியில் சந்தித்த இருசாராருக்குமிடையில் பலத்த மோதல்கள் இடம்பெற்றன.

இருபகுதியினரிடையே நடைபெற்ற கைகலப்பில் ஐவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் பொலிஸார் தலையிட்டு இருபகுதியினருக்குமிடையிலான மோதல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக கூறப்படுகிறது

### உடுகம்பொலவை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

பொலிஸ் பகுதியில் அவருக்கு இன்னும் ஆதரவு இருந்துவருவதன் காரணமாக அவரை எளிதில் கைது செய்ய முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுறது.

பத்திரிகைக் சாரியாலயங்களுக்கு தொலைபேசி மூலம் தனது அறிக்கைகளை முன்னாள் பிரதிப் பொஸ்மா அதிபர்உடுகம்பொல தெரிவித்துவருகிறார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரில் ஒரு பகுதியினர் உடுகம்பொலவுக்கு ஆதரவாக இருப்பதாக அரசு சந்தேகித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சுன்னாகோவின் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81